Namma Kalvi
www.nammakalvi.org

ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி
சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 94432-31727

# பத்தாம் வகுப்பு - தமிழ் இரண்டாம் தாள்

## அரையாண்டுப் பொதுத்தேர்வு – டிசம்பர் 2018

## மொத்த மதிப்பெண்கள் : 100

## விடைக்குறிப்பு

### பிரிவு –I (மதிப்பெண்கள் : 20)

| | | |
|---|---|---|
| | **பகுதி – 1** | **5x1=5** |
| | **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்** | |
| 1 | இ) 30 | 1 |
| 2 | இ) குறிப்புப்பெயரெச்சம் | 1 |
| 3 | அ) உவமைத்தொடர் | 1 |
| 4 | அ) கைக்கிளை, பெருந்திணை | 1 |
| 5 | இ) ஆறு | 1 |
| | **பகுதி – 2** | **5x1=5** |
| | **கோடிட்ட இடத்தை நிரப்புக** | |
| 6 | கதிர்வேல் வெற்றிலை தின்றான் (அ) சோறு உண்டான் (பொருத்தமான வேறு இனங்குறித்தல் தொடர் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 1 |
| 7 | எற்பாடு | 1 |
| 8 | உலகியல் | 1 |
| 9 | ப.ஃ.றொடை வெண்பா | 1 |
| 10 | செம்மொழிச் சிலேடை | 1 |
| | **பகுதி – 3** | **10x1=10** |
| | **சுருக்கமாக விடையளி** | |
| 11 | காய்+ கனி = காய்கனி (வேறு உம்மைத்தொகையை சான்றாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 1 |
| 12 | நான்கு + மறை - ரிக், யஜுர், சாம, அதர்வண | 1 |
| 13 | பொங்கல் வைக்க வெண்கலப் பாத்திரம் வாங்கினேன் | 1 |
| 14 | கடைத்தெருவில் ஆயத்த ஆடை வாங்கினேன். | 1 |
| 15 | வண்டு முரல கோழி கொக்கரிக்கும். | 1 |
| 16 | மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது. | 1 |
| 17 | பாரதியார், வள்ளலாரைப் “புதுநெறி கண்ட புலவர்” என்று போற்றினார். | 1 |
| 18 | பொய் சொல்லல் | 1 |
| 19 | உரிச்சொற்றொடர் | 1 |
| 20 | நூலைப்படி, வாயிற்படி | 1 |

ஸ்ரீ வித்யபாரதி - தமிழ்

| | | |
|---|---|---|
| | **பிரிவு - II (மதிப்பெண்கள் : 10)** | |
| | **எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | **5x2=10** |
| **21.** | ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே தொடர்ந்து நின்று வேறுபொருளையும் தந்து தனி மொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழியாகும்.<br>எ.கா. அந்தமான் - தீவு [அந்த + மான் (விலங்கு)] | 1½<br><br>½ |
| **22.** | உயர்திணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்களும், அஃறிணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்களும் குறிப்பினால் ஒன்றனை விலக்கி ஒன்றனைக் குறிக்கும். அஃது ஒன்றொழி பொதுச்சொல்லாகும்.<br>எ.கா. ஆயிரம் மக்கள் போர்க்களம் சென்றனர்.<br>இத்தொடரில் மக்கள் என்னும் சொல் குறிப்பால் பெண்பாலை விலக்கி ஆண்பாலை உணர்த்தியது. | 2 |
| **23.** | <u>நேர்விடை</u>: "இது செய்வாயா?" என்று வினவிய போது செய்வேன் என்று உடன்பட்டுக் கூறும் விடை நேர்விடை.<br><u>சுட்டுவிடை</u> : மதுரைக்கு வழி யாது?" என்று வினவினால் 'இது' என்பதுபோலச் சுட்டிக்கூறும் விடை, சுட்டுவிடை. | 1<br><br>1 |
| **24.** | நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.<br>முல்லைத்திணைக்குரிய நிலம் - காடும் காடுசார்ந்த இடமும்<br>பொழுது - பெரும்பொழுது-கார்காலம், சிறுபொழுது-மாலை | 1<br>1 |
| **25.** | பாடாண்திணை : பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை.<br>(பாடு + ஆண் + திணை = பாடாண்திணை) | 2 |
| **26.** | ஆசிரியப்பா நான்கு வகைப்படும். அவை<br>நேரிசை ஆசிரியப்பா<br>இணைக்குறள் ஆசிரியப்பா<br>நிலைமண்டில ஆசிரியப்பா<br>அடிமறிமண்டில ஆசிரியப்பா | ½<br><br>1½ |
| **27.** | <u>முதலெழுத்து</u> : உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் ஆகும்.<br><u>சார்பெழுத்து</u> : முதலெழுத்தைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்து எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும். | 1<br><br>1 |
| | **பிரிவு - III(மதிப்பெண்கள் : 50)**<br>**பகுதி - 1** | |
| | **எவையேனும் இரண்டனுக்கு மட்டும்** | **2x5=10** |
| **28.** | **வினா ஆறு வகைப்படும். அவை**<br>**அறிவினா** : தான் ஒரு பொருளை நன்கறிந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா.<br>எ.கா. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.<br>**அறியாவினா** : அறியாத ஒன்றை அறிய வினவும் வினா அறியா வினா ஆகும்.<br>எ.கா. மாணவன் ஆசிரியரிடம் "திருக்குறளின் பொருள் யாது?" என்று வினவுதல்.<br>**ஐயவினா** : ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினவும் வினா ஐயவினா.<br>எ.கா. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?<br>**கொளல் வினா** :பொருளைப் பெறும் (வாங்கும்) பொருட்டு வினவும் வினா, கொளல் வினா. எ.கா. புத்தகம் என்ன விலை?<br>**கொடைவினா** : ஒரு பொருளைக் கொடுப்பதற்காக வினவும் வினா, கொடை வினா. எ.கா. மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ!<br>**ஏவல்வினா** : ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா ஏவல் வினா.<br>எ.கா. முருகா சாப்பிட்டாயா? | 5 |

ஸ்ரீ வித்யபாரதி தமிழ்

29. **இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணி :** சொல் பின்வருநிலையணி — 1

**அணி இலக்கணம் :** செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல்பின்வருநிலையணி ஆகும். — 2

**விளக்கம் :** இக்குறட்பாவில் துப்பு என்னும் ஒரேசொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வருநிலையணி எனப்படும். — 2

**(அல்லது)** — 2

**தற்குறிப்பேற்ற அணி :**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது, தற்குறிப்பேற்ற அணி ஆகும். (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி)

**எ.கா.** "தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம் — 1½
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்"

**விளக்கம்:** இப்பாடலில், கோழிகள் விடியற்காலையில் கூவுதல் இயல்பான நிகழ்ச்சி. ஆனால் கவிஞர், காட்டில் நள்ளிரவில் கணவனைப் பிரிந்து வருத்தமுற்ற தமயந்தியின் துயரைப்போக்க, இருளை நீக்குவதற்குத் தேரேறி விரைந்து வருமாறு ஞாயிற்றைக் கோழிக் கூட்டங்கள் கூவி அழைப்பதாகத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே, இது தற்குறிப்பேற்ற அணி. — 1½

30. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

| | | |
|---|---|---|
| மறப்/பினு | நிரை நிரை | கருவிளம் |
| மோத் /துக் | நேர் நேர் | தேமா |
| கொள/லா/கும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பார்ப் /பான் | நேர் நேர் | தேமா |
| பிறப் /பொழுக் /கங் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| குன் /றக் | நேர் நேர் | தேமா |
| கெடும். | நிரை | மலர் |

— 4

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது — 1

**பகுதி - 2** — 2x5=10

31. **புகை நமக்கு பகை :**

**முன்னுரை :**

- கமலநாதன் ஓயாமல் புகைப் பிடிக்கும் தீய பழக்கத்தை உடையவன். கமலநாதனின் மனைவி கோகிலா. கணவனின் புகைப் பழக்கத்தை மாற்ற கோகிலா எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில் கமலநாதன் எவ்வாறு மனம் மாறினான் என்பதைப் பற்றிக் காண்போம். — 1

**கோகிலாவின் அறிவுரை:**

- மருத்துவமனைக்குச் சென்று வந்த கோகிலா, புகைப் பழக்கத்தினால் புற்றுநோய் வரும் என்று மருத்துவர் கூறியதாகக் கமலநாதனுக்குக் கூறுகிறாள். மனைவி கூறியதை மறுத்த கமலநாதன் புகைப்பழக்கத்திலிருந்து தன்னை மாற்றிக்கொள்ள முடியாது என்று முடிவாகக் கூறிவிடுகிறான்.

**இராமலிங்கத்தின் மரணம்:**

- கமலநாதனின் நண்பன் இராமலிங்கமும் புகைப் பிடிக்கும் பழக்கம் உடையவர். அவரது புகைப் பழக்கத்தினால் சுவாசப் பை புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார். இதை அறிந்த கமலநாதன் மனம் கலங்கினான். இறுதியாக இராமலிங்கம் மரணமடைகிறார். — 3

**சியாமளாவின் நிலை:**

- சியாமளா கணவனை இழந்து வெறும் கழுத்தும், வெறிச்சோடிய நெற்றியுமாக இருந்தாள். அவளது குழந்தைகள் அவளிடம் 'அப்பா எப்பமா வருவாரு' என்று கேட்டனர். இதைக் கண்ட கமலநாதன் மிகவும் மனம் கலங்கினான்.

| | | |
|---|---|---|
| | **கமலநாதனின் மனமாற்றம்:**<br>➢ நண்பனின் மரணம் கமலநாதனை மிகவும் பாதித்தது. இனிப்புகைப் பிடிக்கும் பழக்கத்தைச் சிறிது சிறிதாக மாற்றிக் கொள்வதாக கோகிலாவிடம் கூறுகிறான். கோகிலாவும் கணவனின் முடிவைக் கேட்டு மிகவும் மனம் மகிழ்கிறாள்.<br>**முடிவுரை:**<br>➢ புகை நமக்குப் பகை என்னும் பொன்மொழியை உணர்ந்து புகைப்பழக்கத்தில் இருந்து மீளுவோம் ஆரோக்கியமான வாழ்வு வாழ்வோம். | 1 |
| 32. | **அகழாய்வு**<br>**முன்னுரை:**<br>ஒரு இடத்தில் தொல்லியல் எச்சங்கள் இருப்பதை, நிலம் ஊடுருவும் கருவியான ராடார்கள் போன்ற தொலையுணர்தல் முறைகள் மூலம் ஓரளவு துல்லியமாகவே அறிந்து கொள்ள முடியும். நம்முடைய வாழ்க்கை முறைகளையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு அகழாய்வு இன்றியமையாதது என்பதை இக்கட்டுரை மூலம் காணலாம்.<br>**கீழார்வெளி அகழ்வாராய்ச்சி:**<br>➢ 1963 ஆம் ஆண்டு கீழார்வெளி கடல் அகழ்வராய்ச்சியின் போது கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன.<br>➢ காவிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பது பற்றியும், அவர்கள் பயன்படுத்திய அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம், வெண்கலத்தாலான புத்தர் பாதம், செங்கற்களால் கட்டப்பட்ட படகுத்துறை முதலிய தடயங்களின் மூலம் நாம் கண்டறியலாம்.<br>**அகழாய்வு :**<br>➢ தொல்லியல் ஆய்வாளர்கள் மண்ணை மிக நுட்பமாகவும், பொறுமையுடனும் சிறுகச் சிறுகத் தோண்டிச்சிதையாமல் தடயங்களை திரட்டுவர். இதையே அகழாய்வு என்பர்.<br>**பழமையான இலக்கியங்கள் உதவியுடன் அகழாய்வு :**<br>➢ பழமையான இலக்கியங்கள் அகழாய்வு செய்வதற்கு உறுதுணையாக உள்ளன.<br>➢ சிற்றூர்கள், நகரங்கள், துறைமுகங்கள், கோட்டைகள், அரண்மனைகள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புகள் இவ்விலக்கியங்களில் காணப்படும். மேலும் இவற்றின் துணைகொண்டு அகழாய்வு செய்வதற்கான இடங்களை முடிவு செய்கின்றனர்.<br>**அகழ்வாய்வின் பயன்கள்:**<br>➢ நாகரிகத்தின் கூறுகளை அறிந்துக்கொள்ளவும், நம் முன்னோர்களின் வாழ்க்கை முறை அவர்கள் பயன்படுத்தியப் பொருட்கள் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள உதவுகிறது. மக்கள் எப்போது வாழத் தொடங்கினர் என்பதை தெரிந்துக்கொள்ளவும், எத்தகையப் பண்பாட்டினை நம் முன்னோர்கள் கடைப்பிடித்தனர் என்பதை அறிய அகழ்வாய்வு பயன்படுகிறது.<br>**முடிவுரை:**<br>➢ நம் மக்கள் எப்படி வாழந்தார்கள், நம்முடைய பண்பாடு, பழக்க வழக்கம் அவர்கள் பயன்படுத்திய தடயங்கள் என்ன என்பதை நம்முடைய அகழாய்வின் மூலம் அறிய முடிகிறது எனலாம். | 1<br>3<br>1 |
| 33. | **அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகள்:**<br>**முன்னுரை:**<br>அண்ணா அவர்கள் ‘காஞ்சி’ இதழ் மூலம் தன் தம்பியர்களுக்குக் கருத்து விருந்தளித்தார். அவர் எழுதிய கருத்துகளை இங்குக் காண்போம்.<br>**முதல்வர் பணி:**<br>அண்ணா அவர்கள் சென்ற ஆண்டு தைப் பொங்கலைத் தன் தம்பிகளோடு புத்தாடை அணிந்து கொண்டாடினார். தன் தம்பியர்கள், புனலில் | 1 |

ஸ்ரீ வித்யபாரதி

| | | |
|---|---|---|
| | குளித்து சோலையில் உலாவி மகிழ்ந்ததைக் கண்டு களித்தார். அது அண்ணாவுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால், இவ்வாண்டுஅவ்வாறு பொங்கலைக் கொண்டாட இயலவில்லையே என வருந்தினார். ஏனென்றால், முதல்வர் என்னும் பொறுப்பான பதவியில் தன் தம்பியர்கள் தன்னை அமர்த்திவிட்டனர் எனக் கூறியுள்ளார்.<br>**நற்காலம்; பொற்காலம் :**<br>அண்ணா தேர்தலில் பெருவெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்துவிட்டார். இது நற்காலத்தின் தொடக்கம்; நாட்டிற்குப் பொற்காலம் என அண்ணாவின் தம்பிகள் மகிழ்ச்சியடைந்தனர். அண்ணாவும் தன் தம்பியர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நடப்பதாகக் கூறினார்.<br>**தைப் பொங்கலின் சிறப்பு :**<br>பொங்கல் நாளில் மகிழ்ச்சி பிறக்கின்றது; பொலிவு வருகின்றது; உழைப்பின் பெருமை உணரப்படுகின்றது. தமிழர் அனைவரும் உரையாடி மகிழ வாய்ப்புக் கிடைக்கிறது. பண்டைத் தமிழர் வாழ்ந்த முறையினை அறிய முடிகின்றது. வறுமையுற்றோர் கூட இப்பொங்கலன்று புதுத்தெம்பு பெறுகின்றனர்.<br>**தைப்பொங்கலின் பெருமை:**<br>நிலமடந்தை வளம் எல்லாம் தரும் நாள் இந்நாள்; தைத் திங்கள் முதல் நாள் தமிழர் திருநாள் எனக் கொண்டாடப்படும் முதல் நாள்; பொங்கி ஆக்கும் பொங்கலை அமிழ்தமாகக் கருதி உண்ணும் நன்னாள்; உழைப்பு உயர்வைத் தரும் என்பதை உணர்த்திடும் நாள்; புதுமை இன்பம் காணும் நன்னாள் எனக் கவிஞர் முடியரசன் கவிதையைச் சான்று காட்டி அண்ணா கடிதம் எழுதியுள்ளார்.<br>**முடிவுரை :**<br>இத்தகைய நாளில் இன்பமும், புதுமையும், பொலிவும், வளமும் பொங்கட்டும்; தமிழும் தமிழகமும் வாழட்டும் என அண்ணா வாழ்த்தியுள்ளார்.<br>**வாழ்க அண்ணாவின் புகழ்!**<br>**ஓங்குக அண்ணாவின் கருத்து!** | 3<br><br>1 |
| | பகுதி - 3 | 3+2=5 |
| 34. | அ) மாலதி பள்ளி நூலகரிடம் ஆங்கில அகராதி, உலக வரைபட நூல்(நில வரைபட நூல்), அறிவியல் இதழ் எந்த அடுக்ககத்தில் (நிலைஅடுக்ககம்) இருக்கிறது என வினவினாள்.<br>**ஆ) அரபு எண்ணுக்குரிய தமிழ் எண்:**<br>i) **சாச** ii) **கஅ** iii) **உ0கஅ** iv) **க0** | 3<br><br>2 |
| 35. | **கணினிக்காலம்**<br>அ) இது கணினி (கணிப்பொறி)க் காலமாகும். கணினி நம் அன்றாட வாழ்வில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இன்றைய நிலையில் வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் கணினி அதிகளவில் பயன்படுகிறது. கணினி அதிவேகமாகத் தகவல் சீரமைப்பு செய்யும் கருவியாகும்.<br>**ஆ) தமிழ்ப் பழமொழிகள்:**<br>i) காலத்தே கடமையைச் செய்.<br>ii) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.<br>iii) எலி வளையானாலும் தனிவளையேச் சிறந்தது.<br>iv) செய்யும் தொழிலே தெய்வம். | 3<br><br>2 |

ஸ்ரீ வித்யாபாரதி - தமிழ்

| | | | |
|---|---|---|---|
| | **பகுதி - 4** | 1x5=5 |
| 36. | **அ) சிறுகதை:** தலைப்பு:<br>ஒரு பக்க அளவில் பொருத்தமான கதைக்கருவுடன் சிறுகதை அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்.<br>**ஆ) கவிதை:**<br>எதுகை மோனையுடனும் எளிய சொற்களுடனும் நயமாக எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 1<br>4<br><br><br>5 |
| | **பகுதி - 5** | 1x5=5 |
| 37. | **பா நயம் பாராட்டல்:**<br>**திண்ட கருத்து :**<br>செந்தமிழ்நாடு என்று சொல்கின்ற போது, நம் காதுகளில் இன்பத்தேன் வந்து பாய்கிறது. எமது தந்தையர் நாடு என்று சொல்கின்ற போது புதிய சக்தி. நம் மூச்சினில் பிறக்கிறது. காவிரி, தென்பெண்ணை, பாலாறு வைகை, பொருநை போன்ற பல ஆறுகள் பாய்ந்தோடுவதால் தமிழ்நாடு செழிப்பாக காணப்படுகிறது.<br>**மோனைத்தொடை:**<br>**செ**ந்தமிழ் - **ச**க்தி<br>**த**ந்தையர் - **தே**ன்வந்து<br>**கா**விரி - **க**ண்டதோர்<br>**மே**லிய - **மே**னி<br>**எதுகை :**<br>செ**ந்**தமிழ் - த**ந்**தையர்<br>கா**வி**ரி - மே**வி**ய<br>**இயைபு :** ஓரடியில் சீர்தோறும் கடைசியில் நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரத் தொடுப்பது சீர் இயைபுத் தொடையாகும்.<br>**சொல்நயம் :** சக்தி பிறக்குது, தேன்வந்து பாயுது, மேனி செழித்த, மேவிய யாறு<br>**அணி :** சொற்பொருட் பின்வருநிலையணி<br>**சுவை :** பெருமிதச் சுவை<br>**தலைப்பு :** செந்தமிழ்நாடு (ஏற்புடைய ஐந்து நயங்கள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 2<br><br><br>1<br><br><br>1<br><br>1 |
| | **பகுதி – 6** | 1x5=5 |
| | **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க** | |
| 38. | வங்கியின் பெயர், இடம், நாள்<br>சேமிப்புக் கணக்கு எண்<br>பெயர்<br>ரூ. 15000 தொகை(எண்ணாலும் எழுத்தாலும்)<br>பணவிவரம்<br>கயல்விழி என்று கையொப்பமிடல்<br>(பொருத்தமான இடங்களில் மேற்கண்ட விவரங்கள் மிகச் சரியாக நிரப்பியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கவும்) | 5 |
| | **பகுதி - 7** | 3+2=5 |
| 39. | அ) i) அன்பரசு தன் தலைமையாசிரியரிடம் சென்று தன் நிலையைக் கூறி, பள்ளியிலேயே நடைபெறும் தனி வகுப்பு மற்றும் சிறப்பு வகுப்புகளில் தன்னைச் சேர்த்துக்கொள்ளச் சொல்வான். தன் தந்தையிடம் தன் நிலைமையைப் புரிய வைக்குமாறு தலைமையாசிரியரிடம் வேண்டிக் கொள்வான்.<br>ii) நீங்கள் செய்வது பிடிக்கவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறிவிட்டு நடந்தவற்றை வீட்டிலும் சொல்லிவிடுவேன்.<br>iii) இல்லை. வகுப்பில் நடத்தும் அன்றைய பாடங்களை அன்றே படிப்பது, வகுப்பில் நடக்கும் அனைத்து தேர்வையும் நல்ல முறையில் எதிர்கொண்டு தவறுகளை ஆசிரியரிடம் கேட்டு திருத்திக் கொண்டால், பொதுத் தேர்வில் நிச்சயம் நல்ல மதிப்பெண்களில் தேர்ச்சி பெறலாம்.<br>ஆ) i) நானாக இருந்தால் கண்டிப்பாக உதவி செய்வேன்<br>ii) சேவை மனப்பான்மை (அ) நற்பண்பு | 3<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>2 |

ஸ்ரீ வித்யபாரதி

| | பிரிவு - IV (மதிப்பெண்கள் : 20)<br>பகுதி - 1 | |
|---|---|---|
| | **எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்** | **1x10=10** |
| 40. | **அ)** அனுப்புநர்<br>பெறுநர்<br>விளித்தல்<br>பொருள்<br>செய்தி<br>இப்படிக்கு<br>இடம், நாள்<br>உறைமேல் முகவரி<br><br>**அல்லது**<br>**ஆ) பாராட்டுக் கடிதம்**<br>இடம், நாள்<br>விளித்தல்<br>செய்தி<br>இப்படிக்கு<br>உறைமேல் முகவரி | 1<br>1<br>1<br>1<br>3<br>1<br>1<br>1<br><br>1<br>1<br>1<br>6<br>1 |
| | பகுதி - 2 | |
| | **எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்** | **1x10=10** |
| 41. | தலைப்பு<br>குறிப்புச் சட்டகம்<br>முன்னுரை<br>பொருளுரை<br>மேற்கோள்<br>உள்தலைப்புகள்<br>முடிவுரை | 1<br><br>1<br>4<br>2<br>1<br>1 |


# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

**சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,**
**திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.**
**அலைபேசி : 99655-31727, 94432-31727**

## தமிழ்த்துறை

**இரா.சபிதா.,எம்.ஏ.,டி.டி.எட்.,பி.எட்.,**
**தமிழாசிரியை. (அலைபேசி - 97906 91433)**



ஸ்ரீ வித்யபாரதி - தமிழ்

www.nammakalvi.org